AL/2015/55/T-I

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2015 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2015 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2015

කර්ණාටක සංගීතය I
கர்நாடக சங்கீதம் I
Carnatic Music I

55 T I

පැය දෙකයි
இரண்டு மணித்தியாலம்
Two hours

**கவனிக்க:**

※ **எல்லா** வினாக்களுக்கும் விடை எழுதுக.

※ விடைத்தாளில் தரப்பட்டுள்ள இடத்தில் உமது **சுட்டெண்ணை எழுதுக.**

※ விடைத்தாளின் பிற்பக்கத்தில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசிக்க.

※ **1** தொடக்கம் **50** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் (1), (2), (3), (4), (5) என எண்ணிடப்பட்ட விடைகளில் **சரியான** அல்லது **மிகப் பொருத்தமான** விடையைத் தெரிந்தெடுத்து, **அதனைக் குறித்து நிற்கும் இலக்கத்தைத் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு அமைய** விடைத்தாளில் **புள்ளடி** (×) இடுவதன் மூலம் காட்டுக.

1. 'ஆலந்தானுகந்து' என்ற தேவாரம் அமைந்துள்ள பண்
   (1) தக்கராகம் (2) தக்கேசி (3) காந்தாரம் (4) கொல்லி (5) நட்டராகம்

2. சங்கீர்ணஜாதி அடதாளத்தின் மொத்த அட்சரங்களிலிருந்து சதுஸ்ரஜாதி அடதாளத்தின் மொத்த அட்சரங்களைக் கழித்தால் வரும் அட்சர எண்ணிக்கைக்குரிய தாளம்
   (1) கண்டஜாதி திரிபுடைதாளம் (2) கண்டஜாதி ஜம்பைதாளம்
   (3) சங்கீர்ணஜாதி ரூபகதாளம் (4) மிஸ்ரஜாதி ஜம்பைதாளம்
   (5) மிஸ்ரஜாதி திரிபுடைதாளம்

3. 'ஸ்வாமி நான் உந்தன்' என்ற பதவர்ணத்தை இயற்றியவர்
   (1) அருணாசலக்கவிராயர் (2) பாபநாசம் சிவன் (3) முத்துத்தாண்டவர்
   (4) வேதநாயகம் பிள்ளை (5) மாரிமுத்தாப்பிள்ளை

4. 'ஸரிஸதாத' - என்ற முறையில் இசைக்கருவிகளில் வாசிக்கப்படும் கமகம்
   (1) ஸ்புரிதம் (2) ஆந்தோளிதம் (3) பிரக்தியாகதம் (4) திரிபுச்சம் (5) ஆகதம்

5. ஆரோகணம் மட்டும் வக்ரமாயுள்ள இராகம்
   (1) கமாஸ் (2) ஸ்ரீராகம் (3) ஸாரங்கா (4) ரீதிகௌளை (5) ஸகானா

6. ஹிந்துஸ்தானி சங்கீதத்தில் 'துர்கா' என்ற இராகத்திற்கு ஒப்பான கர்நாடக இராகம்
   (1) சுத்தஸாவேரி (2) மத்தியமாவதி (3) மோகனம் (4) கேதாரகௌளை (5) பூபாளம்

7. சங்கிரகசூடாமணி என்னும் நூலை இயற்றியவர்
   (1) வேங்கடமகி (2) ஜெயதேவர் (3) கோவிந்தாச்சாரியார்
   (4) பைடால குருமூர்த்தி சாஸ்திரி (5) ஸாரங்கதேவர்

8. ஹிந்துஸ்தானி, கர்நாடக சங்கீதம் ஆகிய இரண்டிற்கும் பொதுவான ஒரு இராகத்தினை இரு இசை வித்துவான்களும் பக்கவாத்தியங்களுடன் மேடையில் மாறி மாறிப் பாடுவது
   (1) பலடாஸ் (2) துருபத் (3) ஜுகல்பந்தி (4) அந்தரா (5) தும்ரி

9. திரி அன்னியஸ்வர பாஷாங்க இராகம்
   (1) காம்போஜி (2) பைரவி (3) முகாரி
   (4) ஹிந்துஸ்தான் காபி (5) பிலஹரி

10. மேலைத்தேய இசையில் பயன்படுத்தப்படும் பிரதான நரம்புக் கருவிகளில் ஒன்று
    (1) மெண்டலின் (2) கிளாரினெட் (3) முகர்சிங் (4) சக்ஸபோன் (5) தம்புரா

11. ● பல்லவி சேஷய்யரால் 8 மணி நேரம் பாடப்பட்ட இராகம்
    ● இந்த இராகத்தின் ஆரோகண அவரோகண முறையை 22 ஆவது மேளத்தில் கையாண்டால் சாலகபைரவியும் 29 ஆவது மேளத்தில் கையாண்டால் ஆரபியும் கிடைப்பதைக் காணலாம்
    ● ஔடவ சம்பூர்ண இராகம்
    ● ஸரிமபதா என்ற ஸ்வரக்கோர்வையில் ஏககருதிதைவதம் ஒலிக்கிறது
    மேற்கூறிய கூற்றுகளுக்குப் பொருத்தமான இராகம்
    (1) சண்முகப்ரியா (2) வசந்தா (3) மோகனம் (4) சாவேரி (5) சக்ரவாகம்

[பக். 2 ஐப் பார்க்க

Department of Examinations, Sri Lanka

12. ஸரிகமதாநிஸ் - ஸ்நிஸ்தாபமபகாமரிஸ என்ற ஆரோகண அவரோகணங்களையுடைய இராகம்
(1) ஆனந்தபைரவி (2) நாட்டைக்குறிஞ்சி (3) கானடா
(4) ஹிந்துஸ்தான் காபி (5) சாவேரி

13. ஆதியப்பய்யரால் காமாட்சி என அழைக்கப்பட்ட வாக்கேயகாரர்
(1) சியாமாசாஸ்திரிகள் (2) பைடால குருமூர்த்தி சாஸ்திரிகள்
(3) முத்துஸ்வாமி தீக்ஷிதர் (4) தியாகராஜ சுவாமிகள்
(5) கனம் கிருஷ்ணய்யர்

14. 'திருத்தாளச்சதி' - என்ற பதிக வகையை அருளியவர்
(1) திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் (2) திருநாவுக்கரசு நாயனார்
(3) சுந்தரமூர்த்தி நாயனார் (4) மாணிக்கவாசக சுவாமிகள்
(5) அருணகிரிநாதர்

15.
பால்
தேனொடு பால்
இங்கேவா தேனொடு பால்
மடக்கிளியே இங்கேவா தேனொடு பால்
சிறையாரும் மடக்கிளியே இங்கேவா தேனொடு பால்
என்ற அமைப்பில் அமைந்துள்ள யதி
(1) கோபுச்சயதி (2) ஸ்ரோத்தோவகயதி (3) மிருதங்கயதி
(4) விஷமயதி (5) டமருயதி

16. சிக்காரி - என்னும் தந்தியையுடைய வாத்தியம்
(1) தம்புரா (2) ஸரோட் (3) ஸிதார் (4) ஸாரங்கி (5) கோட்டுவாத்தியம்

17. தனது முதலாவது இசைத்தட்டாக 'ஒருமையுடன் நினது திருமலரடி' - என்ற தமிழ் இராகமாலிகை விருத்தத்தைப் பாடியவர்
(1) செம்மங்குடி ஸ்ரீநிவாஸ ஐயங்கார் (2) அரியக்குடி ராமானுஜ ஐயங்கார்
(3) செம்பை வைத்தியநாத பாகவதர் (4) டி.கே. பட்டம்மாள்
(5) மகாராஜபுரம் விஸ்வநாதஐயர்

18. கோவிந்தாத்வரி, நாதாம்பிகாசுதவெங்கடாத்வரி ஆகிய முத்திரைகளைக் கையாண்ட வாக்கேயகாரர்
(1) சாரங்க தேவர் (2) வேங்கடமகி (3) க்ஷேத்ரக்ஞர் (4) ஜெயதேவர் (5) இராமாமாத்யர்

19. கருவினுருவாகிவந்து, சரணகமலாலயத்தை என்ற பாடல்களின் வகை
(1) தேவாரம் (2) திருவாசகம் (3) திருப்புகழ் (4) திருப்பல்லாண்டு (5) திருவிசைப்பா

20. பதம் என்னும் உருப்படி வகையின் சிற்பி எனப் போற்றப்படுபவர்
(1) சாரங்க தேவர் (2) ஊத்துக்காடு வேங்கடசுப்பையர் (3) க்ஷேத்ரக்ஞர்
(4) கனம் கிருஷ்ணய்யர் (5) சுப்பராம தீட்சிதர்

21. A - பல்லவி, அனுபல்லவி என்ற அங்கவித்தியாசங்களைக் கொண்டிராது
B - இவ்வுருப்படி பரஸ், காபி, பெஹாக், ஹமீர்கல்யாணி போன்ற தேசிய இராகங்களிலும் இயற்றப்பட்டுள்ளன
C - ஹிந்துஸ்தானி இசையில் கஜல் என்ற உருப்படிக்கு ஒப்பானதாகும்
D - பச்சை சிருங்கார ரஸத்தை வெளிப்படுத்தாத உருப்படியாகும்
மேல்வரும் கூற்றுகளுள் ஜாவளியின் இலட்சணத்திற்குப் பொருத்தமானது
(1) AD (2) AC (3) AB (4) BC (5) BD

22. இருவரிடையே நடக்கும் உரையாடலை சித்தரிப்பதாக அமைந்துள்ள பாடல்
(1) சம்வாத தரு (2) வருணனை தரு
(3) உத்தர பிரதியுத்தர தரு (4) ஸ்வாகத தரு
(5) ஜக்கினி தரு

23. ஒலியடக்கி (Mute) என்ற பாகத்தைக் கொண்டுள்ள வாத்தியம்
(1) மிருதங்கம் (2) வீணை (3) நாதஸ்வரம் (4) தம்புரா (5) வயலின்

24. ஓர் இராகத்தைப் பாடும்போது இடையிடையே முடிவுறும் ஸ்வரம்
(1) வின்னியாசம் (2) அபன்னியாசம் (3) சன்னியாசம் (4) நியாஸம் (5) அல்பத்துவம்

25.  இவ்வங்கம் குறிக்கும் பெயர்
(1) குருவிராமம் (2) புலுததுருதம் (3) குருத்ருத விராமம்
(4) புலுதத்ருதவிராமம் (5) குருதுருதம்

26. தனது 7 ஆவது வயதில் வியன்னாவில் வயலின் வாசித்த மேலைத்தேய இசைக்கலைஞர்
(1) தான்சேன் (2) பாக் (3) மொஸாட் (4) பீதோவன் (5) அமிர்குஸ்ரு

[பக். 3 ஐப் பார்க்க

Department of Examinations, Sri Lanka
Department of Examinations, Sri Lanka

27. அல்லாரக்காகான், உஸ்தாத்ஸாகிர்ஹுசைன் ஆகியோரால் வாசித்துப் பிரபல்யமடைந்த தாளவாத்தியம்
(1) மிருதங்கம் (2) தவில் (3) கஞ்சிரா (4) கடம் (5) தபேலா

28. ● கன நய தேசிய பாணியில் பாடுபவரில் இவர் சிறந்த வித்துவானாக விளங்கியவர்
● முசிறி நாட்டு தெலுங்குப் பிராமணர் ஆவார்
● இவருடைய பிரதான சிஷ்யர்களாக கூடால சேஷய்யரையும், சோபனாத்ரி என்பவரையும் குறிப்பிடலாம்
● இவர் அனேக லட்சணகீதங்கள், சஞ்சாரிகீதங்கள், பிரபந்தங்கள், கீர்த்தனைகள் என்பனவற்றை சமஸ்கிருத பாஷையில் தன்னுடைய பெயரையே முத்திரையாகக் கொண்டு இயற்றியுள்ளார்
மேல்வரும் கூற்றுகளுக்குப் பொருத்தமான வாக்கேயகாரர்
(1) மைசூர் வாசுதேவாச்சாரியார் (2) பைடால குருமூர்த்தி சாஸ்திரி (3) மாரிமுத்தாப்பிள்ளை
(4) வேதநாயகம் பிள்ளை (5) கனம் கிருஷ்ணய்யர்

29. வயலின், சாரங்கி ஆகிய இசைக்கருவிகளில் தேர்ச்சி பெற்ற ஈழத்து இசைக்கலைஞர்
(1) பி.எஸ்.ஆறுமுகம்பிள்ளை (2) புத்துவாட்டி எஸ்.என்.சோமசுந்தரம்
(3) தவில் தட்சணாமூர்த்தி (4) என்.எஸ்.உருத்திராபதி
(5) வண்ணை காமாட்சி சுந்தரம்

30. விளம்பர வாத்தியங்களில் ஒன்று
(1) கும்மடி (2) வில்லடி (3) தமுக்கு (4) ரணபேரி (5) சங்கு

31. முதன் முதலில் மேல்நாட்டு இசைக்கருவியாகிய வயலினில் கர்நாடக இசையை வாசித்த பெருமைக்குரியவர்
(1) முத்துஸ்வாமி தீக்ஷிதர் (2) சின்னஸ்வாமி தீக்ஷிதர் (3) பாலுஸ்வாமி தீக்ஷிதர்
(4) இராமஸ்வாமி தீக்ஷிதர் (5) முத்துக்கிருஷ்ண முதலியார்

32. புலியூர்வெண்பா என்னும் நூலை இயற்றிப் பாடிய வாக்கேயகாரர்
(1) மாரிமுத்தாப்பிள்ளை (2) ஜெயதேவர்
(3) தெய்வங்கள் பெருமாள்பிள்ளை (4) கனம் கிருஷ்ணய்யர்
(5) குப்பையா பிள்ளை

33. ஆங்கிலேயரின் ஆட்சிக்குப்பின் ஹிந்துஸ்தானி சங்கீதத்தை அழிந்து போகாமல் காத்த பெருமைக்குரியவர்
(1) பீதோவன் (2) பாத்கண்டே (3) பாக் (4) அமிர்குஸ்ரு (5) தான்சேன்

34. சங்கீதரத்னாகரம், பார்ஸ்வபுராணம் போன்ற நூல்களில் குறிப்பிடப்பட்டுள்ள வட இந்திய இசைக்கருவி
(1) ஸிதார் (2) ஸரோட் (3) தபேலா (4) ஸாரங்கி (5) வயலின்

35. சீனிவாசராவ் என்பவரால் முதன் முதலில் தேர்ச்சிபெற்று வாசிக்கப்பட்ட வாத்தியம்
(1) வீணை (2) வயலின் (3) கோட்டுவாத்தியம் (4) தவில் (5) மிருதங்கம்

36. கனம் கிருஷ்ணய்யரால் புன்னாகவராளி இராகத்தில் பாடப்பட்ட பாடல்
(1) நல்ல நல்ல நிலவு (2) ஆரா அமுதரை
(3) ஏற்ற கைக்கெல்லாங் கொடுக்கும் (4) என்னமோ வகையாய்
(5) அன்னமே என்ன செய்வேன்

37. இசைக்கருவிகளின் நான்கு பிரிவுகளில் அவனத்த என்பது
(1) துளைக் கருவிகள் (2) மிடற்றுக் கருவிகள் (3) நரம்புக் கருவிகள்
(4) தோற்கருவிகள் (5) கஞ்சக் கருவிகள்

38. தீம் தானனன னத்ருத்ருதானி என்னும் ஹிந்தோள ராகத் தில்லானா அமைந்துள்ள தாளம்
(1) சதுஸ்ரஜாதி ஏகம் (2) கண்டஜாதி ஏகம் (3) மிஸ்ரஜாதி ஏகம்
(4) சங்கீர்ணஜாதி ஏகம் (5) திஸ்ரஜாதி ஏகம்

39. ● ஹிரிகேசநல்லூர் முத்தையாபாகவதரிடம் வாய்ப்பாட்டு இசை கற்றவர்
● 'நாதம்' என்னும் மாத இதழின் ஆசிரியராக விளங்கியவர்
● 'வெண்கலக்குரல்' என இரசிகர்களால் விமர்சிக்கப்பட்ட சாரீரத்தைக் கொண்டவர்
● இலங்கை வானொலியில் இசைப்பயிற்சி, பண்ணிசைப் பயிற்சி ஆகிய மாதிரி வகுப்புகளை நிகழ்த்தியுள்ளவர்
மேல்வரும் கூற்றுகளுக்குப் பொருத்தமான ஈழத்து இசைக் கலைஞர்
(1) குப்பிளான் செல்லத்துரை
(2) புத்துவாட்டி எஸ்.என்.சோமசுந்தரம்
(3) செல்வி இராஜராஜேஸ்வரி பாலசுப்ரமணியம்
(4) பிரம்ம ஸ்ரீ வீரமணிஐயர்
(5) இசைப்புலவர் என். சண்முகரத்தினம்

40. வெண்டயம் - என்ற பாகத்தினைக் கொண்ட வாத்தியம்
(1) வயலின் (2) மிருதங்கம் (3) கஞ்சிரா (4) தவில் (5) முகர்சிங்

[பக். 4 ஐப் பார்க்க

Department of Examinations, Sri Lanka
Department of Examinations, Sri Lanka

41. A - பத்மபூஷன், சங்கீத கலாநிதி, சங்கீத சாஸ்திர இரத்னாகரர் என்னும் பட்டங்களைப் பெற்றவர்
B - இந்திய இசை மாணவர்களுக்கு 'மேல் நாட்டிசையின் அம்சங்கள்' என்ற நூலை எழுதியவர்
C - மதுர மதுர வேணுகீத என்ற அடாணா இராகத்தில் அமைந்த பாடலை இயற்றியவர்
D - காஞ்சி காமகோடி பீடாதிபதியினால் 'கீத வாத்ய வினோத' என்ற விருதினைப் பெற்றவர்
E - சென்னை இராணிமேரிக் கல்லூரியில் இசை விரிவுரையாளராகக் கடமையாற்றியவர்
மேல்வரும் கூற்றுகளில் பேராசிரியர் சாம்பமூர்த்தி அவர்களுக்குப் பொருத்தமற்ற கூற்று
(1) A (2) B (3) C (4) D (5) E

42. 'எந்த நேரமும்' என்ற அடதாளவர்ணத்தினை இயற்றியவர்
(1) டைகர் வரதாச்சாரியார் (2) கே. பொன்னையாபிள்ளை
(3) திருக்கோகர்ணம் சுப்பையர் (4) பாபநாசம் சிவன்
(5) ஜி. என். பாலசுப்பிரமணியம்

43. நவராகமாலிகா வர்ணத்தின் உத்தராங்கப் பகுதியில் வரும் இராகங்கள்
(1) கல்யாணி, பேகட, காம்போஜி, மோகனம், யதுகுலகாம்போஜி
(2) காம்போஜி, யதுகுலகாம்போஜி, மோகனம், கல்யாணி, ஸ்ரீராகம்
(3) ஸ்ரீராகம், சங்கராபரணம், கல்யாணி, பிலஹரி, மோகனம்
(4) கேதாரம், சங்கராபரணம், கல்யாணி, பேகட, காம்போஜி
(5) காம்போஜி, யதுகுலகாம்போஜி, பிலஹரி, மோகனம், ஸ்ரீராகம்

44. ஈழத்து இசைக்கலைஞர் என்.கே. பத்மநாதனுக்குக் கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் கிடைத்த சிறப்புப் பட்டம்
(1) இசைநாதலயமணி (2) ஸாமகானலாவண்ய (3) ஏழிசை வேந்து
(4) நாதஸ்வரகலாநிதி (5) ஸாஹித்ய ஸாஹரம்

45. ரஞ்சகத்தின் பொருட்டு சில இராகங்களின் சாயல்களுடன் கூடி விளங்கும் இராகம்
(1) கனபஞ்சகராகம் (2) சுத்தராகம் (3) பிரபாத்ராகம் (4) சங்கீர்ணராகம் (5) சாயாலகராகம்

46. நெட்டாங்கு அலை எனப்படுவது
(1) துணிக்கைகள் ஒலி செல்லும் திசைக்கு செங்குத்தாக அதிர்வது
(2) ஒரு செக்கனில் ஏற்படும் அதிர்வுகளின் எண்ணிக்கை
(3) உரப்பு கூடிய ஒலி அதிக தூரத்திற்கு ஊடுகடத்தப்படல்
(4) துணிக்கைகள் ஒலி செல்லும் ஊடகத்தின் திசையிலேயே அதிர்வது
(5) ஒரு முடி ஒரு தாழி சேர்ந்த அலை

47. ஹிந்துஸ்தானி இசையில் தீவ்ர நி அல்லது சுத்த நி எனப்படும் ஸ்வரஸ்தானத்துக்கு சமானமாக கர்நாடக இசையில் வழங்கப்படும் ஸ்வரஸ்தானம்
(1) காகலிநிஷாதம் (2) சுத்தமத்திமம் (3) சுத்தரிஷபம்
(4) கைசிகிநிஷாதம் (5) சுத்ததைவதம்

48. ஊத்துக்காடு வேங்கடசுப்பையரால் இயற்றப்பட்ட தலைவன் தலைவி உறவு முறையில் அமைந்த பதம்
(1) கண்டேன் கனவினிலே (2) வேலவரே உமைத் தேடி
(3) ஆருடம் ஒன்று சொல்லடி (4) யாரோ இவர் யாரோ
(5) கந்தனிடம் நீ சொல்லடி

49.

| 1 | 2 | 3 | 1 | 2 | 3 |
|---|---|---|---|---|---|
| DHA<br>தா | DHIN<br>தின் | NA<br>னா | DHA<br>தா | THU<br>து | NA<br>னா |
| X | | | O | | |

மேலே தரப்பட்ட டேக்காவைக் கொண்ட தாளம்
(1) தீப்சந்தி (2) ஜப்தால் (3) தாதரா (4) திரிதால் (5) ஸம்

50. C, D, E, F SHARP, G, A, B ஆகிய மேலைத்தேய இசைக் குறியீடுகள் குறிக்கும் ஸ்வரஸ்தானங்களை ஆரோகண அவரோகணத்தில் கொண்டிருக்கும் கர்நாடக ராகம்
(1) சங்கராபரணம் (2) கல்யாணி (3) கரஹரப்ரியா (4) சண்முகப்ரியா (5) பந்துவராளி

* * *

Department of Examinations, Sri Lanka
Department of Examinations, Sri Lanka

3199

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුවේ සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2015 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2015 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2015

කර්ණාටක සංගීතය II
கர்நாடக சங்கீதம் II
Carnatic Music II

55 T II

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
Three hours

**அறிவுறுத்தல்கள்:**

※ **பகுதி I** இல் எவையேனும் **இரண்டு** வினாக்களையும், **பகுதி II** இல் எவையேனும் **மூன்று** வினாக்களையும் தெரிவுசெய்து எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு விடை எழுதுக.

## பகுதி I

**1.** (i) 72 மேளகர்த்தா சக்கரத்தில் முதல் **ஆறு** சக்கரங்களின் பெயர்களை ஒழுங்கு முறையில் எழுதுக.
(ii) பூர்வ மேளகர்த்தா சக்கரங்களில் முழுவதும் விவாதி மேளங்களைக் கொண்ட சக்கரங்கள் யாவை? அச்சக்கரங்களில் இடம்பெறும் இராகங்களை முறையாகத் தருக.
(iii) அக்னி - கோ, பாண - மா என்னும் சங்கேதங்களால் குறிப்பிடப்படும் இராகங்களைத் தருக.
(iv) வேத சக்கரத்தின் நேர் பிரதிமத்திம சக்கரத்தில் இடம்பெறும் இராகங்களையும் அவற்றின் மேள எண்கள், ஸ்வரஸ்தானங்கள் என்பவற்றையும் முறையாகத் தருக.

**2.** (i) வாத்தியத்ரயங்களுள் ஒன்றெனக் கருதப்படும் துளை வாத்தியம் யாது?
(ii) இவ்வாத்தியத்தின் சிறப்பம்சங்களைக் குறிப்பிடுக.
(iii) இவ்வாத்தியத்தை வாசிப்பதில் பிரபல்யமான வித்துவான்கள் **இருவரின்** பெயர்களைத் தருக.
(iv) இவ்வாத்தியத்தின் படத்தை வரைந்து, அதன் பாகங்களைக் குறிப்பிட்டு வாசிக்கும் முறையை விளக்குக.

**3.** (i) கிருதியை அலங்கரிக்கும் அணிகளுள் தாது சம்பந்தமான அணிகள் யாவை?
(ii) ஸ்வரஸாகித்திய அணியை உதாரணத்துடன் விளக்குக.
(iii) 'வலசி வச்சி..' என ஆரம்பிக்கும் நவராகமாலிகா வர்ணத்தின் சரணத்தின் ஆரம்பத்தில் இடம்பெறும் இசையணி யாது?
(iv) தசவித கமகங்களில் டாலு, பிரத்தியாகதம் ஆகியவற்றை உதாரணத்துடன் விளக்குக.
(v) சங்கீத ரத்னாகரம் என்னும் நூலை இயற்றியவர் யார்? அவர் குறிப்பிட்டிருக்கும் 15 வகையான கமகங்களையும் எழுதுக.

## பகுதி II

**4.** (i) முத்துஸ்வாமி தீட்சிதரின் உருப்படிகளை எந்த ரஸத்திற்கு ஒப்பாகக் குறிப்பிடுவர்?
(ii) அவர் இயற்றிய தொகுதிக் கிருதிகள் **இரண்டின்** பெயர்களைத் தருக.
(iii) அவரது வாழ்க்கை வரலாற்றைச் சுருக்கமாக எழுதுக.
(iv) அவரது இசைத் தொண்டுகளை விவரித்து, அவரது உருப்படிகளின் இசைச் சிறப்புகளை மதிப்பிடுக.

**5.** பின்வரும் இராகங்களில் **இரண்டினைத்** தெரிவுசெய்து, அவற்றின் இலட்சணங்களை விரிவாகத் தருக. (உருப்படிகள், சஞ்சாரங்கள் எழுதப்படல் வேண்டும்.)
(i) நடபைரவியின் நேர்பிரதிமத்திம இராகம் (ii) ஹமீர்கல்யாணி
(iii) 21வது மேளகர்த்தா இராகம் (iv) பைரவி

**6.** பின்வரும் இசை உருப்படிகளில் **இரண்டினைத்** தெரிவுசெய்து, அவற்றின் இலட்சணங்களை விரிவாகத் தருக.
(i) தரு
(ii) ஜெயதேவரால் அருளிச் செய்யப்பட்ட சிருங்கார மகாகாவியம்
(iii) ஹிந்துஸ்தானி இசையில் 'தரனா' என்றழைக்கப்படும் கர்நாடக சங்கீத உருப்படி
(iv) 15ம் நூற்றாண்டில் அருளிச் செய்யப்பட்ட சந்தங்களை அடிப்படையாகக் கொண்ட பாடல் வகை

**7.** பின்வருவன பற்றிச் சிறுகுறிப்பெழுதுக.
(i) ஜப்தால் (ii) மார்க்கம் (iii) கரணை
(iv) அஸ்பத்துவம் (v) ஒலியின் பண்பு

**8.** நீர் பார்த்து இரசித்த கர்நாடக இசைக்கச்சேரி **ஒன்றினைப்** பற்றி விமர்சனக் கட்டுரை எழுதுக.
**அல்லது**
நீர் கற்ற மேலைத்தேய சங்கீத வாக்கேயகாரர் **ஒருவரின்** இசைப்பணி பற்றி விரிவாக எழுதுக.

※ ※ ※

Department of Examinations, Sri Lanka

Department of Examinations, Sri Lanka
Department of Examinations, Sri Lanka